# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2021 நளி-சுற. (30-12-89/31-1-90) ஓர் உருபா (இதழ் எண்: 133)

## இந்தியா யார் அப்பன் வீட்டுச் சொத்தும் இல்லை; இங்குள்ள தேசிய இனங்களின் சொத்து!

# இங்கு பிரிவினை கூடாது என்று சொல்வதற்கு எத்துணை உரிமை உண்டோ, அத்துணை உரிமை உண்டு, பிரிவினை வேண்டும் என்பதற்கும்!

## இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும் என்பது ஒரு கருத்துதான்! மாறாத இயற்கையன்று!

## இயற்கையே காலப் போக்கில் மாறுதல் அடையும்போது, கருத்து மாறுபாடு அடைவதற்கு என்ன தடை?

## இந்தியா ஒன்றாய் இருப்பதால் நன்மை பெறுவோரே பிரிவினை வேண்டாம் என்று கூப்பாடு போடுகிறார்கள்!

நாம் முன்னரே கூறியிருக்கின்றோம், "தில்லியில் யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர்களாகிய நாம் முழு உரிமையுடன் வாழ முடியாது; இந்தியா ஒன்றாக இருந்தால் தமிழர்கள் என்றென்றும் வடநாட்டு வணிகர்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் அடிமையாகவே இருக்க வேண்டி இருக்கும்' — (இதழ் எண்: 130 ) என்று!

இந்தியா ஒன்றாக இருப்பதை யாராலும் பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால் தமிழர்களால் மட்டும் பொறுத்துக் கொள்ளவே முடியாது.

Scanned with CamScanner

ஏனெனில் இந்தியாவில் உள்ள மற்ற தேசிய இனங்களைக் காட்டிலும்,வடநாட்டுக்காரர்களாலும், பார்ப்பனர்களாலும், ஏற்பட்ட 'தாக்கங்கள் தமிழினத்திற்கே மிகுதி என்பது முதல் காரணம். தமிழினம் இந்தியத் தேசிய அனைத்தினங்களிலும் இந்தியாவையே ஆண்ட பேரினம் என்பது இரண்டாவது காரணம்...இனி, மூன்றாவது காரணம், தமிழர்களின் தாய்மொழியாகிய தமிழ் இந்தியாவில் சமசுக்கிருதத்தை உள்ளிட்ட அனைத்துத் தேசிய மொழிகளுக்கும் மூத்த, மூலமான மொழியாக இருப்பதுடன், சமசுக்கிருதத் தொடர்பில்லாமல் வேறு தேசிய மொழிகள் இயங்காமல் இருக்கின்ற நிலையில், அதன் தொடர்பு சிறிதும் இல்லாமல் தனித்து இயங்கும் வல்லமை பெற்றிருப்பதும், அனைத்துத் தேசிய மொழிகளினும் மிகப் பழைமை வாய்ந்த இலக்கிய இலக்கணங்களையும், கலை, பண்பாடுகளையும் நாகரிக மூதிர்ச்சியையும் பெற்றிருப்பதும் ஆகும். எனவே, அனைத்து இந்தியத் தேசிய இனங்களை விட, இந்திய வடநாட்டுப் பார்ப்பனீய, வணிக வல்லாட்சியினின்று, முதன் முதலில் பிரிந்து போகும் முகாமைத் தேவையும், இன்றியமையாமையும், முதல் உரிமையும் பெற்று விளங்குவது தமிழ்த் தேசிய இனமே! அதனால்தான் தமிழகம் முழு இறையாண்மை கொண்ட தனி முழு ஆட்சியுள்ள தனிநாடாக ஆக வேண்டும். அந்தக் கருத்துக்கு இங்குள்ள தமிழ் மக்களை இசைவுடையவர்களாக அணியப் படுத்த வேண்டும் என்பது நம் அழுத்தமான, என்றும் மாறாத கொள்கையாக இருப்பதுடன், அதற்கான முயற்சிகளில் இடையறாமல் தொடர்ந்து ஈடுபட வேண்டும் என்பது நம் நோக்கமாகவும் இருக்கிறது.

'இந்தியா பிரியக் கூடாது; இந்தியாவில் உள்ள மக்கள் அனைவரும் பல்வேறு மொழி பேசுபவர்களாகவும், பல்வேறு கலை, பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் உடையவர்களாகவும் இருந்தாலும், பல்வேறு சாதிப் பிரிவுகளையும் மதப் பிரிவுகளையும் கொண்டவர்களாகவும் இருந்தாலும்அவர்கள் தங்களின் வேறுபாடுகளையும் பிரிவுகளையும் மறந்து(!) ஒற்றுமையுடையவர்களாகவும், ஒருமையுணர்வு பெற்றவர்களாகவும் இந்திய தேசியம் என்னும் ஒரு நாட்டுணர்வு கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்' என்று இக்கால், வரலாறும், வாழ்வியலும் அறியாத பலரும் கூறிக் கற்பனைக்கனா கண்டு வருகிறார்கள்.

இந்தியா யார் அப்பன் வீட்டுச் சொத்தும் இல்லை; அது இங்குள்ள தேசிய இனங்கள் அனைத்துக்கும் சொந்தமான சொத்து ஆகும். இதை முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக ஆண்ட வெள்ளைக்காரர்களை ஏமாற்றி, அல்லது சமநிலைத் தாகு (பேரம்) பேசி, அவர்களிடமிருந்து எக்குத்தப்பாக—ஒற்றுக்குத்தலாகத் தங்கள் ஆளுமைக்கு ஏற்றுக் கொண்ட வடவாரியப் பார்ப்பனரும், வல்லரசுகளின் அடிநிலை முதலாளிகளும், இந்தியா பிரியக் கூடாது, பிரிக்க விட மாட்டோம் என்று ஏகடியமும் எகத்தாளம் கொண்டு பேசுவதற்கு என்ன உரிமை இருக்கிறது என்று எண்ணி பார்க்க வேண்டும். இங்கு, பிரிவினை கூடாது என்று கூறுவதற்குப் பிறர்க்கு எத்துணை உரிமை உண்டோ, அத்துணை உரிமை உண்டு, நாங்கள் பிரிவினை வேண்டும் என்பதற்கும்!

இந்தியா ஒன்றாக இருக்க வேண்டும் என்பது ஒரு கருத்துதான்! என்றும் மாறாத,அல்லது மாற்றமுடியாத இயற்கை நெறியன்று. இவர்கள் கூறுவதுபோல் இந்தியா என்றுமே ஒன்றாக இருந்ததில்லை. வரலாற்றுக் கெட்டாத காலந்தொட்டு, இதில் பல்வேறு இன மக்கள், அவர்களின் சிறியதும் பெரியதுமான பல்வேறு மொழிகள், அவை தழுவிய கலை, பண்பாடுகள், நாகரிகங்கள், பழக்க வழக்கங்கள், கடவுள் கொள்கைகள், ஆட்சி முறைகள்,—முதலியவை என்றுமே இந்தியாவை ஒன்றாக, ஒரே தன்மையாக இருக்க விட்டதில்லை. எனவே, இந்தியா ஒன்றாக, ஒருமைப்பாட்டுடன் இருக்க வேண்டும் என்பதும் ஒரு பொருளற்ற ஆட்சிப் பேராசை கொண்ட வெறுங் கருத்துதான், அதனை இயற்கையாக்கி விட வடநாட்டிலுள்ள அரசியல் வீணர்கள் சிலர் கற்பனைக்கனாகண்டு வருவதும், அக்கனவை நனவாக்க இங்குள்ள சில அடிவருடிகளும், பதவி மோப்ப நாய்களும் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு அங்காந்து திரிவதும் வேடிக்கையிலும் வேடிக்கையாகப் போய் விட்டது. மேலும் இயற்கையே காலப்போக்கில் பல்வேறு படிநிலை மாறுதல்கள் அடையும் போது, இப்பொருளற்ற புன்னிலைப் பொய்க் கருத்துகள் மாறுபாடு அடைவதற்கு என்ன தடையாக இருக்க முடியும்? இவ்வகையில் இந்தியா ஒன்றாக இருப்பதைத் தங்கள் வாழ்க்கைக்கு ஊதியமாகப் பயன் படுத்திக் கொள்ளும் ஒரு வகைத் தந்நலக் கூட்டமே, பிரிவினை வேண்டாம், ஒற்றுமை வேண்டும், ஒருமைப்பாடு வேண்டும் என்று முரண்டு பிடிக்கின்றனர்.

அன்றிருந்தது கூட்டுக் குடும்ப நிலை. இக்காலத்தில் நிலவுவதோ தனிக் குடித்தன நிலை மனப்பாங்கு. இவ்வாறு காலநிலையும் ஒட்டு மொத்த மாறுபாடடைந்து, மக்கள் மனநிலைக்கு உகந்தபடியாய் இருக்க, ஓர் ஐந்தாண்டுக் காலம் ஆட்சி செய்ய வந்தவர்கள் 'இந்தியாவைப் பிரிக்க விட மாட்டோம்' என்று கூறுகின்ற அளவில் அதிக உரிமை கொண்டாடுவது வல்லதிகார மனப்பாங்கே தவிர வேறில்லை. வலிவும் பொலிவும் பெற்றிருந்து அவற்றைக் காலப் போக்கில் இழந்து நிற்கும் ஒரு தேசிய இனத்தை, சாதி, மத அரசியல் பொருளியலால் வல்லாண்மை பெற்று நிற்கும் ஓர் இனத்தவர்கள் தங்கள் ஆளுமைக்குக் கீழ்தான்

Scanned with CamScanner

# செய்திகள், உரைகள், செயல்கள்!

## தலைவர் தோற்றதில் மகிழ்ச்சி!

உள்துறை அமைச்சராய் இருந்த பூட்டாசிங், மக்களவைத் தேர்தலில் தோல்வி அடைந்ததை, மற்றெல்லாரையும் காட்டிலும் அதிக மகிழ்ச்சியுடன் கொண்டாடியவர்கள் உள்துறை அமைச்சகத்தைச் சேர்ந்தவர்கள்தாம். அவர் தோல்வியடைந்த உடனேயே இனிப்பு வழங்கத் தொடங்கி விட்டார்கள், அவர்கள்! —*செய்தி*

## பழைய கருப்பனே!

18 ஆண்டுகளுக்கு முன்பு முதலமைச்சர் பதவியிலிருந்த வீரேந்திர பாட்டில் மீண்டும் கருநாடகத்தின் முதலமைச்சராக்கப் பட்டிருக்கிறார்... நாட்டை இருபத்தோராவது நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி வந்த இராசீவ், இப்போது பதினேழாவது நூற்றாண்டு மனப்பான்மை உள்ளவர்களை நம்பி, அவர்களை மீண்டும் முதலமைச்சர் பதவியில் அமர்த்தியிருப்பது அவருடைய இரங்கத் தக்க நிலையையே காட்டுகிறது.

—*தினமணி*. ஆசிரியவுரை (11-12-89)

(முன் பக்கத் தொடர்ச்சி)

அடங்கி ஒடுங்கி உரிமையிழந்து வாழ்விழந்து கிடக்க வேண்டும் என்று கூறுவதற்கு என்ன உரிமையிருக்கிறது? தாக்குண்ட இனம் ஒட்டியிருக்க விரும்பினால் ஒட்ட வைத்துக்கொள்வதிலும் ஒருமைப்பாடும் ஒற்றுமையும் பேசுவதிலும் தவறில்லை. ஆனால் விரும்பத் தகாத ஒட்டுறவினின்று விடுபட்டுப் பிரிந்து போய், முழு உரிமையுள்ள தனி நிலை ஆட்சி அமைத்துக் கொள்ள விரும்பும் ஓரினத்தைச் சட்ட திட்டங்களாலும், ஆளுமைத் தந்திர சூழ்ச்சிகளாலும் அடக்கு வன்முறைகளாலும், கிடுக்குப் பிடி போட்டு, ஒடுங்கியே கிட என்று சொல்வது எந்த வகையில் மாந்த நேயமும், மக்கள் ஞாயமும் ஆகும் என்று நம்மால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

மாமியார், மாமனார், நாத்துனார் கொடுமைக்கும் தாக்குதலுக்கும் உரிமையிழப்புக்கும் ஆளான மருமகள், தன் கணவனுடன் தனிக் குடித்தனம் நடத்த விரும்பினால், அதை அம் மாமியார் மாமனார் தடுப்பது எவ்வகையில் ஞாயம், அறம் ஆகும்! அது போன்றதுதான் தனிநாட்டு விடுதலைக் கோரிக்கையும் என்று நாம் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு ஞாய வழியில் அறவழியில் கருதாமல் அம் மாமியாரும் மாமனாரும் தங்கள் ஆளுமை அதிகாரம் போய் விடக் கூடாதே என்பதற்காக, குடும்ப ஒற்றுமை குலைந்து போகும், வலிமை குறைந்து போகும் என்றெல்லாம் ஞாயம் பேசுவது, இயற்கை நெறிக்கும் உயிர்வாழ்க்கை முறைக்குமே எதிரானது, கேடானது என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும்.

இவ் விழிநிலைக் கோட்பாடுகளால் இந்தியா பிளவுபடக் கூடாது என்பதற்கோ, தமிழ்நாட்டுப் பிரிவினை கூடாது என்பதற்கோ, அல்லது இங்குள்ள தேசிய இனங்கள் பிரிந்து போக ஒப்ப மாட்டோம் என்பதற்கோ யாருக்குமே உரிமையில்லை என்று தெளிவாக உணர்ந்து கொள்க!

தேசிய இன விடுதலை இயற்கையானது; தேவையானது!

## இந்தியாவில் கடும் தண்ணீர்ப் பஞ்சம்!

1990 க்குப் பிறகு இந்தியாவில் கடுமையான தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படும் என்றும், அதனால் உணவுப் பொருள் விளைவும், குடிநீர் வழங்கலும் பெருமளவு தாக்கப்படும் என்றும், வாசிங்டனைச் சேர்ந்த ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று கூறியுள்ளது. —*அமெரிக்க ஆய்வு அறிக்கை.*

## பெண் துறவி தேர்தலில் வெற்றி!

மகாபாரதம், இராமாயணம் பற்றிச் சொற்பொழிவு செய்யும் பெண் துறவி உமாபாரதி என்பவர் (பாரதீய சனதா) ம. பி. யில் உள்ள கசூராகோ தொகுதியில் வெற்றி பெற்றுப் பாராளுமனறம் சென்றுள்ளார். —*செய்தி.*

## பள்ளிகளின் இரங்கத் தக்க நிலை!

நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளும் ஒவ்வொரு வகையில் குறைபாடு உடையனவாகவே உள்ளன. எனவே அவை மிகச் சிறந்த கல்விக் கூடங்களாகத் திகழ முடியவில்லை. 35 ஆண்டுகளுக்கு முன் நாட்டில் 2.3 இலக்கம் பள்ளிக்கூடங்-தாம் இருந்தன. இப்பொழுது 6 9 இலக்கமாக இத் தொகை உயர்ந்துள்ளது. இந்தியாவிலுள்ள தொடக்கப் பள்ளிகளில் 40 விழுக்காட்டுப் பள்ளிகளுக்குச் சரியான கட்டடங்கள் கிடையாது. 40 விழுக்காட்டுப் பள்ளிகளுக்குக் கரும்பலகைகளே இல்லை. 60 விழுக்காட்டுப் பள்ளிகளுக்குக் குடிநீர் வசதி இல்லை. 35 விழுக்காட்டுப் பள்ளிகள் ஒரே ஓர் ஆசிரியரைக் கொண்டே இயங்குகின்றன.

தமிழ்நாட்டைப் பொறுத்த வகையில் சிற்றூர்ப் புறங்களில் உள்ள அடிப்படைப் பள்ளிகளில் 60 விழுக்காட்டுப் பள்ளிகளுக்குச் சரியான கட்டடங்களே இல்லை. உண்மையில அவை மாட்டுத் தொழுவங்களாக இருப்பதற்குத்தான் தகுதியானவை

இப்போதுள்ள கல்வி முறையினால் மாணவ குழுகாயத்திற்குச் சமநிலையும், சமநெறியும் ஆகியவற்றிற்குக் கேடு நேர்ந்துள்ளது. சிற்றூர்ப் புறங்களில் உள்ள கல்வி நிலையங்களில் படிப்பவர்கள் 2-ஆம் தர 3-ஆம் தர கல்விதான் பெற முடிகிறது.

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# விடுதலை விரும்பிக்குத் தந்தை விடுத்த விடை!

மடல் : 3 (முன்னிதழ்த் தொடர்ச்சி)

எனவேதான், பொருளியல், குமுகவியல் நிலையில் விடுதலை முயற்சியை எட்டுவதும், அவ்வப் பொழுது, நம் நாட்டில் உள்ள மக்கள் நிலைப்படி, ஏற்கனவே அவர்கள் வளர்த்தெடுக்கப்பட்டுள்ள தன்மைப்படி, அமைந்துள்ள அரசியல் நிலைகளுக் கேற்ப, அவர்களைச் சுற்றிவளைத்துக் கொண்டுள்ள அறியாமை, அடிமைத்தனம், உரிமை உணர்-வின்மை, முதலாளியம், வாழ்க்கைத் தேவைகளுக்கு அவர்கள் அங்காந்து முதலாளியத்திடம் அடைக்கலம் தேடி வாழ்கின்ற அவலம், சாதிகள், சமயங்கள், ஏமாற்றுகள், எத்துகள், புரட்டுகள் ஆகியவற்றின் குன்றுகள், குவடுகள், பள்ளங்கள், படுகுழிகள் இவற்றின் தன்மைகளுக்கேற்ப, இனி, இவற்றுக்கும் மேலாக அவர்கள் நம்-மேல் கொள்ளும் நம்பாமை, புறக்கணிப்பு, விளங்கிக் கொள்ளாமை முதலியவற்றுக்கு ஏற்ப,—படிப்படியாக, அடுத்தடுத்து வகுக்கும்—செயற்படுத்தும் திட்டங்களாகவே அமைய முடியும்.

இனி, இம் முயற்சிகளுக்கும் இடையில், நாம் பொருள் வாய்ப்புக் குறை என்னும் இருள் நிலை, சட்ட திட்டங்கள் என்னும் புயல், சிறை, அடக்குமுறை, துன்புறுத்தம், அச்சுறுத்தம் முதலிய சூறுவளி, மழை, நில நடுக்கம், விடாமழை போன்ற துன்ப, துயரங்களையும் எதிர்கொண்டு, அவற்றிற்கும் நடுவில் நம்மை நிலை நிறுத்திக் கொள்ளவும் வேண்டியிருக்கின்றது, இல்லையா? இனி, இவ்வாறன்றி எடுத்த எடுப்பிலேயே அவ் விடுதலைக் கனியை எப்படிப் பறிப்பது என்று திட்டமிடுவதும், அவ் வகையாகத் திட்டமிட்டாலும், அதை மக்களிடத்தில் உடனே எடுத்துக் கூறி அல்லது செயலில் செய்து காட்டி விளங்க வைப்பதும் அத்துணை எளிதாகுமோ? அதற்கு முன் எடுத்துக்கூறி—அக் கருத்துகளை மக்களிடம் கொண்டு செல்லுவதற்குத் தான் எத்தனை முயற்சி வேண்டப்பெறுகிறது. நன்கு எண்ணிப் பார்க்கவும்.

காணுதான் காட்டுவான் தான்காணான்; காணுதான்
கண்டானும் தான்கண்ட வாறு.

என்கிறது குறள். நமக்கு முன் செயலிற் புகுந்த பேராளிகளின் போராட்ட முயற்சிகளை, ஒரு சில இளைஞர்களைத் தவிர, பொதுமக்கள் என்பார் அனைவரும் எவ்வளவில் எதிர்த்தனர்; இகழ்ந்தனர்; தடுத்தனர்; தடையாக நின்றனர் என்பதையெல்லாம் மிகவும் ஆழமாகவும் அமைவாகவும் எண்ணிச் சிந்தித்துப் பார்க்கவும்.

இனி, அடிமையும் அறியாமையும் நம் மக்கள் கூட்டத்தின் புறத்தே இல்லை. அகத்தேயே— குருதியிலேயே—நாடி நரம்பிலேயே — நாடித் துடிப்பிலேயே— ஒன்றிக் கிடக்கின்றன. இவற்றைப் பிரித்தெடுத்து அவர்களுக்கு அடையாளங் காட்டுவது மிக மிகக் கடினம். இந்த உண்மையான காரணத்தால்தான் கடந்த 50, 60 ஆண்டுக் காலப் பொதுவுடைமையர்களின், குமுகாயச் சிந்தனையாளர்களின்-முயற்சி ஓர் இருபது விழுக்காடு கூட வெற்றி பெறவில்லை. அவர்களின் முயற்சியோ நம் முயற்சிகளை விட மிக மிக வலிவானதும், வளம் சான்றதும், பொருள் அடிப்படை மிக்கதும், பொதுமக்களை எளிதே கவர்தற்கேற்ற வகையில் கவர்ச்சி மிக்கதும், விளம்பரம் நிறைந்ததும் ஆரவாரம் உடையதும் ஆகும். அவையே பயன்படாத பொழுது எந்த வலிவும் அற்றதும், கவர்ச்சி, விளம்பரம் இல்லாததுமான நம் இயக்க முயற்சிகள் என்ன பயன் தந்து விடும் என்று நீ நினைக்கிறாயோ, எனக்கு விளங்கவில்லை. ஆனாலும், நாம் மனம் சோர்ந்து விடாமல், நம்மால் இயன்ற அளவு நாம் கருத்தளவில் முயன்று கொண்டுதானே உள்ளோம். கருத்து நிலையிலேயே நாம் இன்னும் எய்த வேண்டிய இலக்கை எய்தவில்லையே! அதற்குள் எப்படிச் செயலுக்குப் போவது? செயல்கள் தாம் தொண்டர்களையும் பயனையும் தரும் என்றால், எந்த வகையான செயல்கள் என்பதை நாம் வரையறுக்க வேண்டாமா? நம் மக்கள் இன்னும் அரசியல் உணர்விலேயே ஓரளவு கூட முன்னேறவில்லையே. உரிமை உணர்வு நிலையில் எங்ஙனம் அவர்கள் நாம் கூறுவதை விளங்கிக்கொள்ள இயலும்? வெள்ளைக்காரர்களுடன் போராடிய உரிமை உணர்வு நிலை வேறு; தேசிய இனத்தின் உரிமை உணர்வு வேறு. அவர்கள் தேசம் என்பதையே இந்தியா என்றன்றோ எண்ணிக் கொண்டுள்ளனர். அவர்களைத் தேசிய இன உணர்வுக்குக் கொண்டு வருவதென்றால், போதுமான கருத்து விளக்கம் கொடுக்கப் பட வேண்டுமன்றோ?

நம் உ.த.மு.க.வை எடுத்துக் கொண்டால், வெறும் தேசிய இன விடுதலையை மட்டுமே, அஃது அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை என்பதை முதலில் நீ தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். அதன் இறுதிப் பயன் தேசிய இன விடுதலை தான் என்றாலும், அதற்கு முன் அதன் இடைநிலைப் பயன்களாகத்தானே அதன் ஏழு கொள்கைகளும் வகுக்கப் பெற்றுள்ளன. அக் கொள்கைகளைத் தேசிய இன விடுதலை பெற்றபின் முயன்று பெறலாமென்றால், அஃது இயலாது. அக் கொள்கைகளின் இடைப் பயனை உருவாக்கிக் கொள்ளாமல் மக்கள் இன, நாட்டு விடுதலை பெற்றும் பயனில்லையாகப் போய்விடும். இந்தியா விடுதலை பெற்று இக்கால் முலப் பயன் இன்றி எத்துணை இடர்ப்படுகின்றது என்பதைத்தான் அனைவரும் அறிவோமே!

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# விடுதலைப் போர்கள் இருவகை!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா

இந்நூற்றுண்டு விடுதலைப் போர்கள் பலவற்றைக் கண்டுள்ளது. இவ்விடுதலைப் போர்களை ஆய்ந்து பார்ப்போர், இவ்விடுதலைப் போர்கள் இருவகைப் பட்டன என்பதை உணர்வர். ஓர் இனத்தை மற்றோர் இனம் அடிமைப் படுத்தி ஆள்வதை எதிர்த்து நடத்தப்படும் விடுதலைப் போர்கள் முதல் வகையைச் சாரும். இம்முதல் வகையை **இன விடுதலைப் போர்** எனக் குறிக்கலாம். இங்கிலாந்திடமிருந்து இந்தியத் துணைக் கண்ட இனங்கள் விடுதலை பெறுமாறு நடத்தப்பட்ட போராட்டமும், பாக்கிசுத்தானிடமிருந்து விடுதலை பெற வங்காள இனம் நடத்திய போரும், பிரான்சிடமிருந்து விடுதலை பெற வியத்நாமிய இனம் நடத்திய போரும் முதல் வகைப் போர்களுக்கு (இன விடுதலைப் போர்களுக்கு) எடுத்துக் காட்டுகளாகும்.

தம் இனத்தையே சார்ந்த கொடுங்கோலனை எதிர்த்து அதே இனத்தைச் சார்ந்த மக்கள் நடத்தும் விடுதலைப் போராட்டம் இரண்டாம் வகையைச் சாரும். நாட்டின் சார் (Tsar) மன்னனை எதிர்த்து உருசிய மக்கள் நடத்திய போராட்டமும், ஈரான் நாட்டின் சா (Shah) மன்னனை எதிர்த்து ஈரானிய மக்கள் நடத்திய போராட்டமும், பிலிப்பைன்சு (Philli pines) ஆளுநன் மார்க்கோசு (Marcos) நடத்திய ஆட்சியை எதிர்த்துப், பிலிப்பைன்சு மக்கள் நடத்திய போராட்டமும, அண்மைக் காலத்தே (1989) அங்கேரி (Hungary), கிழக்கு செர்மனி (East Germany), செக்கோசுலோவாக்கியா (Czechoslovakia) நாடுகளில் நடைபெறும் ஒருகட்சி ஆட்சியை (one-party rule) எதிர்த்து அந்நாட்டு மக்கள் நடத்துகின்ற போராட்டங்களும் இரண்டாம் வகைப் போராட்டங்களுக்கு எடுத்துக் காட்டுகளாகும்.

இவ்விரு வகையான விடுதலைப் போர்களுக்கும் சில ஒற்றுமைகளும், சில வேறுபாடுகளும் உண்டு. இவ் வேறுபாடுகளை அறிந்து கொள்ளாமல், இருவகைப் போர்களையும் ஒன்று போலவே கருதுவோர், விடுதலைப் போர்களின் செயல் முறைகளைப் பற்றித் தவறான எண்ணங் கொண்டு மயங்க நேரிடும்.

இருவகைப் போர்களுக்குமிடையேயுள்ள முகாமையான வேறுபாட்டினை இங்கு விளக்குவோம்.

ஓர் இனம் தன் இனத்தையே சார்ந்த கொடுங்கோலனிடமிருந்து விடுதலை பெற நடத்தப்படும் (இரண்டாம் வகைப்) போர்களில், விடுதலை விரும்பிகள் பல நூற்றுக் கணக்கிலோ, சில ஆயிரக் கணக்கிலோ கொல்லப்படலாம். ஆனால் பல்லாயிரக் கணக்கிலோ, இலக்கக்கணக்கிலோ மக்கள் கொல்லப் படுவதும், ஆயிரக்கணக்கான பெண்டிர் கற்பழிக்கப் படுவதும், பலகோடி உருபா கணக்கான சொத்துகள் அழிக்கப்படுவதுமான பேரழிவுகள் ஏற்பட்டதாக வரலாறில்லை. ஏனெனில் அத்தகைய பேரழிவுகளைச் செய்ய கொடுங்கோலாட்சியினரின் படைவீரர்கள் முன்வர மாட்டார்கள். அப் படை வீரர்களும், கொடுங்கோலாட்சியிலிருந்து விடுதலை பெற விரும்பும் மக்களும் ஒரே இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதே இதற்குக் காரணம். நம் இனத்தைச் சார்ந்த மக்களைப் பல்லாயிரக்கணக்கிலோ, இலக்கக் கணக்கிலோ கொன்று குவிக்க அப் படை வீரர்கள் முன்வர மாட்டார்கள்.

ஈரானில் நடந்ததென்ன? ஈரானில் சா (Shah) மன்னனின் ஆட்சியை எதிர்த்து மக்கள் அமைதியாகவும், சில வேளைகளில் வன்முறையாகவும் போராட்டம் நடத்தி வந்தார்கள். விடுதலை விரும்பிகள் சிறையிலடைக்கப் பட்டனர். அடித்து நொறுக்கப்பட்டனர். உடற் சிதைவுக்கு (சித்திரவதைக்கு) ஆளாக்கப் பட்டனர். கொல்லப் பட்டனர். இறுதியில் மக்களின் எதிர்ப்பு வலுத்தது. சா மன்னன் பொது மக்களைத் தாக்கும்படி தன் படை வீரர்களுக்கு கட்டளையிட்டான். படைவீரர்கள் அக் கட்டளையை ஏற்க மறுத்தனர். படைவீரர்களின் துணையின்றி மக்களின் போராட்டத்தைக் கட்டுப் படுத்த முடியாததால், சா மன்னன் நாட்டை விட்டு வெளியேறினன். படைவீரர்கள் மக்களைத் தாக்க மறுத்ததேன்? மக்களும் படைவீரர்களும் ஒரே இனத்தைச் சார்ந்தவர்கள் என்பதே இதற்குக் காரணமாம்.

பிலிப்பைன்சு (Phillipines) நாட்டில் நடந்ததென்ன? அந்நாட்டு ஆளுநன் மார்க்கோசு (Marcos) நடத்திய ஆட்சியின் கொடுமைகளை எதிர்த்து மக்கள் பேராட்டங்கள் நடத்தினர். போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் சிறைப்படுத்தப் பட்டனர். துன்புறுத்தப் பட்டனர். சிலர் கொல்லப் பட்டனர். போராட்டம் மிக வலுக்கவே, மார்க்கோசு தன் படையை மக்கள் மீது ஏவிவிட்டான். படைவீரர்களும் போராட்டம் நடத்தும் மக்களும் ஒரே இனத்தைச் சார்ந்தவர்களாதலால், படையின் பெரும்பான்மையான வீரர்கள் பொதுமக்களைப் பெருமளவில் கொல்லும் படியான கட்டளையை ஏற்க மறுக்கின்றனர். போராட்டத்தைக் கட்டுப்படுத்த வியலாமல், மார்க்கோசு நாட்டை விட்டு வெளியேறினன்.

அண்மைக் காலத்தே (1989—இல்) அங்கேரி (Hungary) கிழக்கு செர்மனி (East Germany) செக்கோசுலோவாக்கியா (Czechoslovakia) ஆகிய

நாடுகளில் நடந்ததென்ன? கடந்த நாற்பதாண்டுக் காலமாக இந் நாடுகளில் ஒரு—கட்சி ஆட்சி (one-Party rule) நடந்து வருகிறது. இதனை எதிர்த்தவர்கள் சிறைப்படுத்தப் பட்டனர். பலவாறு துன்புறுத்தப் பட்டனர். 1989—இல் மக்களின் எதிர்ப்பு வலுப்பெற்றது. பரவலானது. நிலைமை கட்டுக் கடங்காமற் போகவே, ஒரு—கட்சி ஆட்சியை மாற்றி மக்களாட்சியை (democracy) விரைவிலேயே ஏற்படுத்துவதாக அந்நாடுகளின் அரசு அறிவித்துள்ளது. ஏன் இந்த மனமாற்றம்? ஒரு—கட்சி ஆட்சியை மாற்றி, மக்களாட்சியை ஏற்படுத்த அரசு ஒத்துக் கொண்டதேன்? பல்லாயிரக் கணக்கான மக்களைக் கொன்று குவித்து, மக்களின் எழுச்சியை வன்முறையாக அடக்கிட, தங்களது படை வீரர்கள் முன்வர மாட்டார்கள் என்பதே காரணமாகும். பல்லாயிரக்கணக்கான அங்கேரி மக்களைக் கொன்றிட அங்கேரிய இனத்தையே சார்ந்த படைவீரர்கள் முன்வர மாட்டார்கள் பல்லாயிரக் கணக்கான செர்மானிய மக்களைக் கொன்றிட செர்மானிய இனத்தையே சார்ந்த படைவீரர்கள் முன் வரமாட்டார்கள். பல்லாயிரக் கணக்கான செக்கொசுலோவாக்கிய மக்களைக் கொன்றிட செக்கொசுலோவாக்கிய இனத்தையே சார்ந்த படைவீரர்கள் முன்வர மாட்டடார்கள்.

இனி, ஓர் இனம் மற்றோரினத்திடமிருந்து விடுதலை பெற நடத்திடும் **இனவிடுதலைப்போர்**களின் நிலைகளைக் கண்ணோக்குவோம். 19-ஆம் நூற்றுண்டில் இங்கிலாந்தும் வேறு சில வெள்ளைக்கார நாடுகளும் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் சிலவற்றை (இந்தியத் துணைக் கண்டம் உட்பட) அடிமைப் படுத்தி ஆண்டு வந்தன. இரண்டாம் உலகப் போரின் முடிவில், இந்த ஐரோப்பிய நாடுகள் தங்கள் படை வலியும், பொருள் வலியும் மிகப் பெருமளவில் குறைந்திருந்த நிலையில், இனியும் பல்லாயிரம் கல்தொலைவிலுள்ள ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளை அடிமைப் படுத்தி ஆளுவது கடினமெனக் கருதி இந்தியா, பாக்கிசுத்தான், இல்ங்கை இன்ன பிற நாடுகளுக்கு விடுதலை வழங்கியது. இரண்டாம் உலகப் போரொன்று ஏற்பட்டு, இங்கிலாந்து தன் படைவலியும், பொருள் வலியும் மிகக் குறைந்து பட்டுத் தளர்ச்சியுற்றதொரு நிலை ஏற்பட்டிரா விட்டால், இந்தியத் துணைக் கண்டத்திற்கு 1947-இல் விடுதலை அளித்திருப்பார்களா என்பது ஐயமே. மேலும், இரண்டாம் உலகப் போரின் போது சுபாசு சந்திர போசு (Subash Chandra Bose) இந்திய தேசியப் படை (Indian National Army) ஒன்றை அமைத்து, இங்கிலாந்தின் படைகளுடன் போரிட்டதைக் கண்ட இங்கிலாந்து அரசு, "இந்தியர்கள் பெருமளவில் கருவியேந்திப் போரிட அணியமாகி விட்டார்கள்- நாம் இரண்டாம் உலகப் போரின் காரணமாகத் தளர்ச்சியுற்றிருக்கும் இந்நிலையில் அத்தகைய விடுதலைப் போரை அடக்குவது கடினம்" எனக் கருதியதும் ஒரு காரணமாகும். இரண்டாம் உலகப் போர் தொடங்கு முன்னால், "இந்தியாவுக்கு முழுவிடுதலை கொடுப்பதில்லை" என்று இங்கிலாந்து கூறியதை இங்கு நினைவூட்டுகிறோம். இங்கிலாந்தின் திடீர் மனமாற்றத்திற்கு நாம் முற்கூறிய காரணியங்களே காரணமாகும்,

இவ்வாறு இரண்டாம் உலகப் போரின் முடிவில் இங்கிலாந்து முதலிய ஐரோப்பிய நாடுகளிடமிருந்து ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் சில விடுதலை பெற்றதைத் தவிர, வேறெந்த நாடோ, இனமோ இன்னோர் இனத்திடமிருந்து கருவியேந்திய மறப்போர் செய்யாமல் விடுதலை பெற்றதாகத் தெரியவில்லை.

இந்நூருண்டின் தொடக்கத்தில் ஐரிசு (Irish) மக்கள் இங்கிலாந்திடமிருந்து விடுதலை பெற மறப்போர் நடத்த வேண்டியிருந்தது. ஏறத்தாழ முப்பதாண்டுகளுக்கு முன்னால் அல்சீரியா (Algeria) பிரான்சிடமிருந்து விடுதலை பெற மறப்போர் நடத்த வேண்டியிருந்தது. அது போலவே வியத்நாம் பிரான்சிடமிருந்து விடுதலை பெற மறப்போர் நடத்த வேண்டியிருந்தது. ஏறத்தாழ இருபதாண்டுகட்கு முன்னால் வங்காள மக்கள் பாக்கிசுத்தானிடமிருந்து விடுதலை பெற மறப்போர் நடத்த வேண்டியிருந்தது.

இத்தகைய இனவிடுதலைப் போர்களில் ஆள்வோரின் படை வீரர்கள் **ஆளப்படும் மக்களின்** இனத்தைச் சார்ந்தவர்களல்லவென்பதால், ஆள்வோரின் படை வீரர்கள் ஆளப்படும் மக்களில் பல்லாயிரக்கணக்கானோரை அல்லது இலக்கக் கணக்கானோரைக் கொல்லவும், பல்லாயிரக் கணக்கான பெண்களைக் கற்பழிக்கவும் தயங்கவில்லை. 1971-இல் பாக்கிசுத்தானியப் படையில் மேற்குப் பாக்கிசுத்தானிய இனத்தவரும், வங்காள இனத்தைச் சார்ந்தவரும் இருந்தனர். வங்காள மக்கள் பெருமளவில் விடுதலைக் கிளர்ச்சி செய்ததை அடக்க மேற்குப் பாக்கிசுத்தானிய இனத்தைச் சார்ந்த படை வீரர்களை அனுப்பியதுடன், வங்காள இனத்தைச் சார்ந்த படை வீரர்களைச் சிறைப்படுத்தினர்; வங்காள இனத்தைச் சார்ந்த படைவீரர்கள் பலரைக் கொன்றனர். வங்காளத்துக்கு அனுப்பப் பட்ட மேற்குப் படை வீரர்கள் வங்காள இன மக்கள் மேல் அவிழ்த்து விட்ட அட்டுழியங்கள் எத்துணை கொடுமையானவை. இறுதியில் வங்காள இனம் விடுதலை பெற்றது.

விடுதலைப் போர்களின் வரலாறுகளையும், செய்திகளையும் படிப்போர், நாம் குறிப்பிடுகின்ற இரண்டு வகையான போர்கட்குமிடையேயுள்ள இம் முகாமையான வேறுபாட்டினைக் கண்ணுருது, இரு வகைப் போர்களையும் ஒன்று போலவே கருதுதல் கூடாது. O

Scanned with CamScanner

# தமிழ் மக்களுக்கு எதிராக 'இந்து' மத வெறிக்கூட்டம் வளர்க்கப்படுகிறது!

"எவன் எவன் கிறித்துவன் இல்லையோ,
எவன் எவன் இசுலாமியன் இல்லையோ,
எவன் எவன் சீக்கியன் இல்லையோ.
எவன் எவன் பௌத்தன் இல்லையோ
எவன் எவன் சமணன் இல்லையோ
அவன்வன் எல்லாம் இந்து"

—என்று சொல்கிறது இந்திய அரசியல் சட்டம்.

பணக்காரக் கொள்ளைக் கூட்டங்களின் கொள்ளைக்கு வாய்ப்பான வாழ்க்கைக்கு, மக்களை மயக்க நிலையிலேயே வைத்திருக்கிற கடவுளை, மதத்தை நம்புகிறவர் ஆனாலும், கடவுளை, மதத்தை நம்பாதவர் ஆனாலும் அனைவரும் இந்திய அரசியல் சட்டப்படி இந்து மதத்தினரே.

தமிழ் நாட்டைப் பொறுத்த அளவில் தொடக்கத்தில் இருந்த சைவ, வைணவ மதங்களும், சிற்றூர்ப் புறங்களில் புழங்கி இருந்த இயற்கை வழிபாட்டு முறைகள் அனைத்தும் இந்து மதம்—என்கிற பார்ப்பன வெறி மதத்திற்குள் அடக்கப் பட்டன.

இதன்படி, இந்து மதத்திற்கென்று 'மனு தரும சாத்திரம்' என்று பார்ப்பனர்களால் அமைக்கப்பட்ட வரையறைகளே பின்னால், சில திருத்தங்களுடன் 'இந்துச்சட்டம்' எனும் பெயரில் இந்திய அரசியல் சட்டம் இயற்றப் பட்டது.

கோயில்களில் பார்ப்பனர்கள்தாம் ஓதுவார்களாக இருத்தல் வேண்டும்.

கோயில்களின் கருவறைக்குள் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நுழைதல் கூடாது.

கோயில்களில் 'தேவமொழி'யான சமசுக்கிருதத்தில்தான் ஓதுதல் வேண்டும். 'நீச மொழி' யான தமிழில் ஓதுதல் கூடாது. என்கிற பார்ப்பன ஆளுமைக்கு எந்த வகையான தடையையும் அந்த இந்துச் சட்டம் கூறவில்லை.

பார்ப்பன ஆளுமைக்கு அடித்தளமாக இருந்த இந்திரா காந்தியின் ஆட்சியில்—காஞ்சி சங்கரப் பார்ப்பனன் தில்லிக்குக் கால்நடையாகப் போன போது, அவன் காலைக் கழுவி அந்தத் தண்ணீரைக் குடித்தார் அன்றைய இந்திரா!

அதே நிலையில் தொடர்ந்து இன்றைக்கும் தமிழ்நாட்டுக்கு வரக் கூடிய எல்லா இந்திய அதிகார வெறியர்களும் காஞ்சி சங்கரப் பார்ப்பனன்களைப் பார்த்து 'தரிசிக்காமல்' போனதில்லை.

அது மட்டும் அல்லாமல், இந்திய ஆளுமைக்குள் தமிழ்நாட்டு பொம்மை ஆட்சியின் இன்றைய தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் கூட (திராவிட வழித் தோன்றல்) காஞ்சி 'பெரியவனின்' 96-ஆவது பிறந்த நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு புகழ்ந்து தள்ளி இருக்கிறார்.

ஆக இன்றைய இந்திய அரசு, ஏதோ வல்லரசுகளின் துணையில் இந்திய வெறி அரசாக மட்டும் இல்லாமல், இந்து மத, பார்ப்பன வெறி அரசாகவும் இயங்குகிறது.

அவர்களுக்கு, இந்தியப் பண்பாடு என்றால் பார்ப்பனப் பண்பாடுதான் தெரியும்.

அதைத்தான் உலகம் முழுக்கப் பரப்புகின்றனர்.

இந்தியா முழுக்கப் பரப்பி இந்தியாவில் உள்ள ஒவ்வோர் இனத்தின் பண்பாட்டையும் ஒழிக்கின்றனர்.

இந்து மத வெறித்தனத்தோடு, சிறுபான்மைக் கிறித்துவர்களையும் முசுலீம்களையும் எதிர்க்கிற இந்து முன்னணி, ஆர். எசு. எசு, விசுவ இந்து பரிசத்-போன்ற அமைப்புகள் இந்திய வெறி அரசால் கடுமையாக வளர்க்கப் படுகின்றன.

இந்தியாவில் உள்ள தேசிய இன விடுதலைப் போராளிகளைக் காட்டிக் கொடுக்கிற கருங்காலிகளாக அந்த இயக்கத்தினர் வளர்க்கப்படுகின்றனர்.

இந்நிலையில் அண்மையில், உத்திரப் பிரதேச மாநில 'அயோத்'தியில் உள்ள பகுதியை விசுவ இந்து பரிசத்—இந்துக்களுக்குத்தான் சொந்தம் என்று சொல்லி—அதை 'இராமன் வாழ்ந்த நிலம்' ('ராம ஜென்ம பூமி') என்று அழைக்கின்றனர்.

அங்கு இருந்த 'பாபர் மசூதி'யை இடித்துவிட்டு அங்குக் கட்டப்பட இருக்கும் ராமசென்ம பூமிக்கு முசுலீம்கள் கடுமையாக எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

ஆனால், விசுவ இந்து பரிசத்-வெறியர்கள் அந்த சென்ம பூமி கட்ட 25-கோடி உருபா தேவை என்பதாகக் கூறி, இந்தியா முழுக்க உள்ள மக்களிடம் செங்கற்களைத் திரட்டிக் கொண்டிருக்கின்றனர்.

அதற்கு இந்தப் பார்ப்பன (இந்து) மத வெறி அரசு வழி விட்டுக் கொண்டுள்ளது.

மேலும், திருச்சியில் 'திராவிட ப்ராம்மண சமசுகிருத சர்வகலாசாலை' என்கிற பொறியியல் கல்லூரியைத் திறக்கப் போகிறது அந்தப் பார்ப்பனக் கூட்டம். அதற்கான அறிக்கையில்,

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# களத்தில் கேட்கும் கானங்கள்!

(ஆசிரியர் குறிப்பு: ''களத்தில் கேட்கும் கானங்கள்'' என்னும் பெயரில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஓர் ஒலியிழைப் பெட்டி (Audio Casette) வெளியிட்டுள்ளனர். அதில் ,ஒலிக்கும் ஒன்பது பாடல்களும் உயிர்ப்பு வாய்ந்தவை; கருத்துச் செறிவுடையவை.அருமையான இனிய இசையுடன் தமிழகத் திரைப்படப் பாடகர்கள் டி. எம். சவுந்தரராசன், பி. சுசீலா, வாணி செயராம், குயிலி, முதலியோர் பாடியுள்ள அப்பாடல்களைப் பெரும்பாலார் கேட்டிருக்க வாய்ப்பில்லையாகையால், அவற்றைச் சில தொடர்களில், நம் 'தமிழ்நிலம்' அன்பர்களுக்காக இங்கு , வெளியிடுகிறோம். கேட்டுச் சுவைக்க இயலாதவர்கள் அக்கருத்துகளைப் படித்தாகிலும் சுவைக்கட்டும். பாடல்களிலும் பாட்டு உரைகளிலும் உள்ள பிற மொழிச் சொற்கள், பிழைகள் களையப் பெறவில்லை.)

முன்னுரை: பாரத அரசின் பாதங்கள் எங்கள் தாயக பூமியில் தடம் புரண்ட போது, தமிழீழ மக்கள் தங்களை வசந்தம் தழுவத் தொடங்கி விட்டதாகவே மகிழ்ந்தனர். சிறீலங்கா அரசின் அராஜகத் தீயில் எரிந்து கொண்டிருந்த இவர்கள் பாரத நாட்டின் சீதளக்காட்டில் நிலைக்கலாம் என கனவுகள் கண்டனர். காக்க வந்தவர்களே தங்களைத் தாக்கத் தொடங்கிய போது, தமிழீழ மக்களின் கனவுகள் கற்பனைகள் யாவும் சிதைந்து போயின. இழப்புகள் எமக்கு புதியவை அல்ல. சோதனைகளை எங்கள் தலைவன் சந்திப்பது இதுதான் முதல் தடவையும் அல்ல. எனவே, பாதி வழியில் எமது பயணம் நிற்காது. தமிழீழ மக்கள் வேதனைத் தீயில் வெந்து கொண்டிருக்கும் வேளையில் அவலங்களுக்கு மத்தியிலும் பாடிக் கொண்டிருக்கின்றனர். பாட மறுக்கப்பட்ட தமிழீழக் குயில்களின் சோகங்களும் தாகங்களுமே இந்தக் 'களத்தில் கேட்கும் கானங்கள்.' விடுதலைப் புலிகளை மக்கள் எப்படி நேசிக்கிறார்கள் என்பதை எமது மக்களின் பல்வேறு தரப்பினரும் வாய்வழியே பாடுகின்றனர். மக்களுக்கான இந்தக் கானங்களை உருவாக்குவதற்குத் துணையாக இருந்தவர்களுக்கு எங்கள் நன்றி. இந்தக் 'களத்தில் கேட்கும் கானங்களை' இந்திய—சிறீலங்க அரசுகளின் கூட்டுச் சதியால் பலாலியில் கொல்லப்பட்ட தீயாகிவிட்ட குமரப்பா, புலேந்திரன், அப்துல்லா, ரகு, நளன், பழனி, சுரேன், நரேஷ், ரஜிஹேன், தவக்குமார், அன்பழகன், ஆனந்த குமார்—ஆகிய பன்னிரெண்டு பேரின் நினைவாலயத்தில் காணிக்கையாக்குகிறோம். புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!)

## களத்தில் கேட்கும் கானங்கள்!

பாடல்: 1

(பாட்டு உரை)

காற்றும் ஒரு கணம் வீச மறந்தது!
கடலும் ஒரு நொடி அமைதியாய்க் கிடந்தது!
தேற்றுவார் இன்றியெம் தேசம் அழுதது!
தெருவில்...வெளியிலும்...தேகங்கள் எரிந்தது!

பாடல்

தீயினில் எரியாத தீபங்களே!—எம்,
தேசத்தில் நிலையான வேதங்களே!

மண்ணினில் விளையாத முத்துக்களே!—நாம்
மாதவம் செய்து பெற்ற சொத்துக்களே!

நெஞ்சினில் நெருப்பேந்தி வாருங்கள்!—புலி
நிச்சயம் வெல்லும் என்று கூறுங்கள்!—(தீயினில்)

கடலினில் கடல்புறு...பயணங்கள் போனது!
சிறிலங்கா இராணுவம் குறி வைக்க லானது!

குமரப்பா,புலேந்திரன்—உடன் பத்து வேங்கைகள்
கொள்கையின் படி,நஞ்சைக்குடித்தபின் சாய்ந்தன!

இளமையில் சருகாகிப் போனவரே!—எம்
இதயத்தில் உருவான கோயில்களே!
—(நெஞ்சினில்)

அப்துல்லா, ரகு, நளன், ஆனந்தக் குமார், நகேஷ்
அன்பழகன், ரஜிஹேன்,பழனி, சுரேன், தவக்குமார்-
ஆகிய வேங்கைகள் அனலிடை போயின!
காவிய நாயகக் களப் பலி ஆயின!

மக்களுக்காகக் கடல் சென்றீரே—மண
மாலைகள் வாடும் முன்னர் போனீரே—(நெஞ்சினில்)

எங்களின் கடலிலே...
எவன் எம்மைப் பிடித்தது?
எங்களின் படகினை...
எவன் இங்குத் தடுத்தது?

இந்திய அரசது...ஏன் துணை போனது?
இடியுடன் பெருமழை ஏன் உருவானது?
கண்களில் நீர் சுமந்து நிற்கின்றோம்!—நீர்
காட்டிய பாதையிலே செல்கின்றோம்!
—(நெஞ்சினில்)

பாடல்; 2

(பாடல் உரை)

(நெஞ்சிலே மிஞ்சி வழியும் வேதனைகளைத் தாயகப் பூமியின் சோகச் செவிகளுக்குச் சொல்ல, தென்றலைத் தூது விடும், கன்னி!)

Scanned with CamScanner

பாடல்

வீசும் காற்றே தூது செல்லு!— தமிழ்
நாட்டில் எழுந்தொரு சேதி சொல்லு!
ஈழத்தில் நாம் படும் வேதனைகள்—இதை
எங்களின் சகோதரர் காதில் சொல்லு! —(வீசும்)

இங்குக் குயிலினம் பாட மறந்தது;
எங்கள் வயல் வெளி ஆடை இழந்தது!
நங்கைகளின் பெரும் மங்கலம் போனது;
சாவு எமக்கொரு வாழ்வென ஆனது! —(வீசும்)

உங்கள் கொடி மலர் இங்கு மடியுது;
ஊர்மனை யாவிலும் சாக் குரல் கேட்குது!
இங்குள்ள பேய்களும் செய்ய மறந்ததை
இந்திய இராணுவம் செய்து முடித்தது! —(வீசும்)

கத்திடக் கேட்டிடும் தூரமல்லோ?—கடல்
கை வந்து தாங்கிடும் நீளமல்லோ?
எத்தனை எத்தனை இங்கு நடந்திட,
எங்களின் சோதரர் கூட்டம்மல்லோ? —(வீசும்)

வேங்கையை வேட்டைகள் ஆடுகிறார்—புலி
வீரரைக் காட்டினில் தேடுகிறார்!
தாங்க முடியல்லை வேதனைகள்—இதைத்
தாயக பூமியின் காதில் சொல்லு! —(வீசும்)

பாடல்: 3

(முன்னுரை: எதிரிகளால் தேடப்படும் காலத்தில், இருக்க இடம் தந்து, இனிய உணவு அளித்துக் கண்ணின் இமை போலக் காத்து, அடைக்கலம் தந்த வீடுகளுக்கு நன்றி கூறும் புலி வீரர்!)

அடைக்கலம் தந்த வீடுகளே!
போய் வருகின்றோம் நன்றி;—நெஞ்சை
அடைக்கும் துயர் சுமந்து செல்கின்றோம்!-உங்கள்
அன்புக்குப் புலிகள் நன்றி! —(அடைக்கலம்)

நாங்கள் தேடப்படும் காலத்தில் நீங்கள்
கதவு திறந்தீர்களே!—எமைத்
தாங்கினால் வரும் ஆபத்தை எண்ணிப்
பார்க்க மறந்தீர்களே! —(அடைக்கலம்)

எங்கள் உடல்களில் ஓடும் செங்குருதி
உங்கள் சோறல்லவா?
உங்கள் சோறல்லவா?—நாங்கள்
தங்கி இருந்த நாள் சில நாள் என்றாலும்
நினைவு நூறல்லவா? —(அடைக்கலம்)

பெற்றோரை உறவை பிரிந்திருந்தோம்—அந்த
இடத்தை நிறைத்தீர்களே—மாற்றார்
முற்றுகை நடுவில் மூடியெமை, உங்கள்
சிறகால் மறைத்தீர்களே! (அடைக்கலம்)

(தொடரும்)

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

"இதில் (அந்தப் பல்கலைக் கழகத்தில்) அரசு எந்த வகையிலும் தலையிட முடியாது. இட ஒதுக்கீடு விதிகளும் இங்கு செல்லாது...எனவே இந்த சர்வ கலாசாலை மூலமாக விசேஷ நன்மை அடைபவர்கள் ப்ராமண சமூகத்தினரேயாகும்.'' என்கிறபடி திட்டமிட்டு அந்தப் பல்கலைக் கழகத்தைப் பார்ப்பனர்கள் கட்டிக் கொண்டு, அங்கு பிற ஏழ்மைத் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்க்கு இடம் ஒதுக்கப்பட மாட்டாது என்பது மீண்டும் பழைய வருணாச்சிரமத்திற்குப் புதிய மெருகு பூசுவது போன்றுள்ளது.

இதற்கு, இந்து மதத்துக்கான — பார்ப்பன மதத்துக்கான இந்திய வெறிச் சட்டத்தின் 30-ஆம் பகுதி இசைவு தருகிறது.

இவை இல்லாமல் அண்மையில், தாழ்த்தப் பட்ட மக்கள் பிற மதங்களுக்கு மாறுவதைத் தடுக்க இந்த இந்து மத வெறி அரசு ஒரு திட்டம் தீட்டியுள்ளது.

இந்து மதத்துக்குள் சாதிய நிலையில் அழுந்தி அடிமைகளாய் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் பலர், தங்களின் பொருளடிப்படையை உயர்த்திக் கொள்ளவும், சாதிச் சேற்றிலிருந்து விடுபடவும் மதம் மாறுகின்றனர்.

அதற்கு வெளிநாட்டு மத நிறுவனங்கள் பணத்தைக் கொடுத்து மதம் மாற்றுகின்றன.

அம் மத மாற்றங்களைத் தடுக்கவும், இந்து மதத்துக்குள்ளாகவே அவர்கள் இருக்க வேண்டும் என்றும் கருதி மதம் மாறுவோர்க்கு மதம் மாறாமல் இருக்க, பணம் தருவதாக இந்து அரசு கூறியுள்ளது.

"மதம் மாறாமல் இருக்க, மதம் மாறுபவர்களின் குறைகளைத் தீர்க்க வேண்டியது தேவையானது. மத மாற்றத்தைத் தடுக்க தாழ்த்தப்பட்டோருக்கு சில வசதிகளைச் செய்து தரும் திட்டம் ஒன்று உருபா. 3 கோடி அளவில் நிறைவேற்றப் படுகிறது"

ஆக இப்படி மக்களை இந்து வெறி மதங்களும், பிற வெளிநாட்டு மதங்களும் கூறு போட்டு அடிமைப் பட்டம் எழுதி வாங்கிக் கொள்கின்றன.

இந் நிலையில், இவ்வெறிக் கூட்டங்கள் தமிழர்களை மட்டும் அன்று, இந்தியாவில் உள்ள அனைத்துத் தேசிய இன உணர்வுகளையும் பண்பாடுகளையும், மொழியையும் அழித்துச் சிதைப்பதுடன், தேசிய இன எழுச்சிகளைக் காட்டிக் கொடுப்பதுமாக இருக்கின்றன.

எனவே—விடுதலைக்குப் போராடுகிற அனைத்துத் தேசிய இன மக்களுக்கும், இப்படிப்பட்ட இயக்கங்களைக் குழி தோண்டிப் புதைப்பதும் தலையாய வேலையாய் இருக்கிறது. O

—விடுதலை விரும்பி.

Scanned with CamScanner

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொழில்! 'மக்கள்' என்று சொல்லும் பொழுதும் எழுதும்பொழுதும் நம் நாட்டு மக்களை நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். அதிலும் நம் தமிழின மக்களை மிக நன்கு வேறு பிரித்து உணர்ந்து கொள்ள வேண்டும். பிற நாட்டு மக்களுக்கும் நம நாட்டு மக்களுக்கும் — உள்ள அடிப்படை வேறுபாட்டை நீ இன்னுமா உணரவில்லை? அவர்கள் உண்மையாகவே தூங்கிக் கொண்டிருந்தவர்கள்; தட்டியெழுப்பியதும் உடனே விழித்துக் கொண்டார்கள். இவர்கள் விழித்துக் கொண்டே தூங்குவார்கள். எழுப்ப எழுப்ப எழுவது போல் பாசாங்கு காட்டி மீண்டும் தூங்குவது போலும் நடிக்கிறார்கள். இவர்களின் மூளைத்திறனே அடிமைத்திறனாகவும், சிந்தனையே அறியாமையாகவும், செயல் திறனே வயிற்றை நோக்கியதாகவுமன்றோ இருக்கின்றன. இவர்களுக்கு உணர்த்துவதென்றால் புதர்களை விலக்கிக் கொண்டு உட்புகுந்து, பாறைகளை உடைத்துக் கொண்டு பள்ளந்தோண்டி, களி மண்ணைப் பெயர்த்தெறிந்து ஊற்றுக் கண்ணைக் காண்பது போல் அவ்வளவு கடினமானதாகும்.

இனி, தென்மொழி அன்பர்கள் யார் என்று நான் வினவியது பற்றி நீ எழுதியிருந்தாய். அவ்வன்பர்களென்று நான் அடையாளம் கண்டு கொள்ளாமைக்கும் நம் கொள்கையே காரணம் என்று நீ எழுதியிருக்கிறாய்.

"ஒன்றிற்கு ஒன்று முரண்பட்ட வழிகள், ஓர் எல்லை நோக்கிச் சிந்திக்கிற சூழலில், ஓர் இயக்கம் செழிப்பாக இயங்க முடியாது" என்று கூறுகிறாய்.

இந்தியாவில் செழிப்பாக இயங்கும் ஓர் இயக்கத்தையோ, குழுமியுள்ளவர்கள் அனைவரும் முரண்படாமல் ஒரே எல்லையை நோக்கிச் சிந்திக்கின்ற ஒரு கொள்கைக் கூட்டத்தையோ உன்னால் காண முடியாது; காட்ட முடியாது. மிக முன்னேறிய அளவில் சிந்திக்கின்ற பொதுவுடைமைக் கொள்கை மரத்தின் கீழ் எத்தனை முரண்பட்ட கூடாரங்கள் உருவாகி, அடிப்படை மரத்தையே அசைத்து வருகின்றன — என்னும் நிலை நீ அறியாததா?

இறைமையைப் பற்றிய கொள்கை முரண்பாடுகள் தாமே மதங்கள். பிறவியைப்பற்றிய கொள்கை முரண்பாடுகள் தானே சாதிகள்! அரசியலைப் பற்றிய கொள்கை முரண்பாடுகள் தாமே நாடுகள்! உண்மையைப் பற்றிய கொள்கை முரண்பாடுகள் தாமே மெய்ம்ம(த்தத்துவ)ங்கள். அறிவைப் பற்றிய கொள்கை முரண்பாடுகள் தாமே கல்வி நிலைகள்!

—இவவாறு, அனைத்து நெறிகளிலும் முறைகளிலும் முரண்பட்ட வழிகளும், ஒன்றுபட்ட வழிகளும், காலத்தினாலும் இடத்தினாலும் அறிவுணர்வினாலும் மனவுணர்வினாலும், தாமே தோன்றிப் பல்கிப் பெருகுவதை எவராலும் தடுக்க முடியாது.

அறிவின் அடையாளமே ஒன்றிப்பு அன்று; இணைப்பும் அன்று; முரண்பாடுகளே! பிரிவுகளே! பிளவுகளே! அன்பின் அடையாளந்தான் ஒற்றுமை! இணைப்பு! அன்பின் அடையாளம் அறிவுக்கு அடையாளம் ஆகாது!

எனவே, அறிவுணர்வு மிகுந்த எந்த இயக்கமும் முரண்பாடுகளை வளர்த்துக் கொள்ளவே செய்யும். அதற்குத்தான் மொழியை அடிப்படையாகக் கொண்ட அன்பியக்கத்தையும் நாம் இணைத்துப் பேச வேண்டும் என்றோம். (நம் நாட்டில் அன்பில்லாமலும் அறிவில்லாமலும் இயங்கும் இயக்கங்கள் மத இயக்கங்களே).

ஆனாலும் நம் இயக்கம்—நீ பொருள்படுத்துகிற செழிப்பில் இயங்காமைக்குக் காரணங்கள் கொள்கை முரண்களோ, அல்லது முரண்பட்ட கொள்கை விளங்குதல்களோ அல்ல!

பொருள் இல்லாமையே ஆகும்! அஃதாவது நம் அன்பர்கள் பொருளால் மயங்குபவர்கள் என்னும் பொருளில் இதைச் சொல்லவில்லை. பொருளால் இயங்குபவர்கள்! பொருளின்றி இயக்கம் ஏது?

நான் முதல் இதழ் தமிழ்நிலத்திலேயே இது பற்றி மிகவும் வலியுறுத்தி எழுதியுள்ளேன். வேண்டுமானால் மீண்டும் அதைப் படித்துப் பார்!

அடுத்து, உன் மடலில் இன்னொரு கருத்தையும் தவறாகச் சுட்டியிருக்கிறாய். அது,

"தென்மொழி இன்னமும் நடந்து வருகிறது என்றால், அவ் வன்பர்களால்தாம்-தொண்டர்களால் தாம் என்பதை மறுக்க இயலாது" என்பது.

இக் கருத்து மிகவும் தவறான கணிப்பில் தோன்றியதாகும் தென்மொழி நடைபெறுவதன் உண்மையையே இன்னும் நீ அறிந்து கொள்ள வில்லை என்பதையே உன் கருத்து தெளிவாகப் புலப்படுத்துகிறது.

"தென்மொழி முழுக்க முழுக்க நான் சோர்ந்து விடாமல் கொடுத்து வரும் உழைப்பினாலும், அதற்குப் பலவகையிலும் ஈடுபடுத்தி வரும் பொருளீடுபாட்டினாலும் மட்டுமே நடந்து வருகிறது. அன்பர்கள் எனப்படுவோர் அதை வாங்கிப் படிப்பவர்கள் மட்டுமே! அதுவும் அவர்களின் அறிவுத் தேவையை நிறைவு செய்து கொள்வதற்காகவே வாங்கிப் படிக்கிறார்கள். நம் மேல் இரக்கப்பட்டோ, இந்தப் பணி தொடர்ந்து இடையறாமல் நடைபெற வேண்டும் என்றோ, அஃது இந்த இனத்திற்கும் நாட்டிற்கும் செய்யவேண்டிய தலையாய கடமை என்று எண்ணியோ, அல்லது ஏதோ நம்மாலான உதவியை இதற்குச் செய்யலாம் என்கிற மனவுணர்வில் அவ்வப் பொழுது ஐந்தும், பத்தும், ஐம்பதும், நூறும், ஏதோ சில வேளைகளில் ஒரிருவர் ஐநூறும், ஆயிரமும் மனமுவந்து தந்து விடுவ

Scanned with CamScanner

தாலோ—அவ்வன்பர்களால் இது நடைபெறுவதாக எண்ணி விடாதே! அவர்கள் ஒருவாறு நம்மேல் அன்புடையவர்களாகவும் நம் தொண்டின் மேல் அக்கறை கொண்டவர்களாகவும் இருக்கலாம்; அதை நான் நன்றியில்லாமல் மறுத்து விட முடியாது. ஆனாலும் அந்த அன்பர்களின் அந்த அன்பு நிலையால்தான் தென்மொழி நடந்து வருகிறது என்பது அறியாமை. மேலும் அந் நிலையில் உதவுபவர்களாக இருப்பவர்கள் ஒரே பெயரினரே அல்லர். வேறு வேறு அன்பர்கள் வேறு வேறு சூழ் நிலைகளில் வேறு வேறு வகையினராக இருந்து அவர்கள் வேறு வேறு காரணங்களுக்காக உதவி—அதுவும் சிறு சிறு அளவில்—அதுவும் தொடர்ந்தன்று—ஓரிரண்டு முறை அல்லது இரண்டு மூன்று முறை உதவி வருபவர்களாகவே அவர்கள் உள்ளார்கள். அவ்வாறானவர்கள் அன்பர்கள் என்று என்னால் குறிக்கப் பெறுபவர்களே தவிர, அவர்களாகவே அன்பர்கள் என்னும் தகுதியைப் பெற்றவர்கள் ஆகிவிட மாட்டார்கள்.

மேலும், நீயும் அவ்வாறே உன்னொடு சேர்ந்த சிலரும் தென்மொழி அன்பர்கள் என்று சொல்லும் தன்மைக்கு உரியவர்களாக உள்ளவர்கள், பல்வேறு நோக்கங்களுக்காகவே நம்மிடம் அன்பும் தென்மொழியிடம் அக்கறையும் காட்டுகிறார்கள். அவர்களில் சிலர் எழுத்தாளர்கள்; சிலர் பாவலர்கள்; சிலர் பேச்சாளர்கள்; சிலர் தங்கள் பகுதிகளில் ஏதோ ஒரு வகையில் தமிழ்த் தொண்டர்கள்—மக்கள் தொண்டர்கள் என்று கருதப்பெறுவதைவிரும்புகிறவர்கள்.

எழுத்தாளர்களும், பாவலர்களும் தங்கள் படைப்புகள் தென்மொழியில் வரவேண்டும் என்னும் எதிர்பார்ப்போடுதான் தென்மொழியை வரவேற்றனர்; நம்பால் அன்பு காட்டினர்; ஆதரவு நல்கினர். அவர்களின் படைப்புகள் ஏதோ ஒரு காரணத்தினால் வர வாய்ப்பில்லை என்று தெரிந்ததும் அந்த அன்பு மாறியது. ஆதரவு தவிர்ந்தது. நம்மை விட்டு மெது மெதுவாக நகர்ந்து போயினர். அவர்களை அன்பர்கள் என்று கருதுகிறாயா என்று இப்பொழுது சொல்

அவர்களுக்கு உண்மையிலேயே, "தமிழ் வளர வேண்டும், அதற்குரிய வரலாற்றுச் சிறப்பை அது பெற வேண்டும்; அதன் அடிப்படையில் இந்த இனம் உரிமை உணர்வு பெற வேண்டும்; அறியாமையை அகற்றிக் கொள்ள வேண்டும், எழுச்சி கொள்ள வேண்டும்; அதன் பின் உரிமைக்காகப் போராடி விடுதலை பெற வேண்டும்!—அம் முயற்சிகளுக்குத் தென்மொழி ஒரு தலையாய வழிகாட்டி, உரிமை முரசு, போராட்டக் கருவி. எனவே அதன் பொருட்டு நாம் அதற்குத் துணை நிற்க வேண்டும். அதன் ஒவ்வோர் அசைவிற்கும் நாம் நம்மாலான வகையில் கை கொடுக்க வேண்டும். அறிவுழைப்பு, மனவூக்கம், உடல் உழைப்பு—ஆகிய மூவுர் உழைப்பையும் நாம் நல்க வேண்டும்" என்ற உணர்வு தோன்றி, நம் இதழை வாங்கவும் விற்கவும், அது தொய்ந்து போகாமல் காக்கவும், தொய்ந்தவிடத்துத் தோள் கொடுக்கவும் இருக்கின்ற கொள்கை உணர்வுள்ளவர்களையே, அவ்வுறுதுணையை எந்தச் சூழலிலும் கை நெகிழ்க்காத மனவுறுதி கொண்டவர்களையே நாம் அன்பர்கள் என்று சொல்லலாம். அத்தகையோர் எத்தனைப் பேர் இருப்பர் என்று நீ கருதுகிறாய்? கணக்கிட்டு எனக்குச் சொல். அப்பொழுதாவது என் அறியாமையை நான் களைந்து கொள்கிறேன். உண்மையைச்சொல்வதானால், நீயும் அவ்வாறு இல்லையேடா, கண்ணு, எண்ணிப்பார். (தொடரும்)

## ஆரிய மதமே இந்து மதம்!

இப்போது பாகித்தான், பஞ்சாப் என்று சொல்லப்படும் பகுதிகளில்தான் ஒரு காலத்தில் ஆரியர்கள் வந்து வாழ்ந்தார்கள். அப்பகுதிக்கு 'சப்த சிந்து தேஷா' என்று பெயர் இருந்தது.

அண்டை நாடுகளில் வாழ்ந்த மக்கள், இந்த ஆரியர்களை 'சிந்து' என்று அழைத்தனர். அது நாளடைவில் 'இந்து' என்று மாறிபது. கி. மு. 486—இல் இப்பகுதியை ஆண்ட 'தர்பூஸ்' என்ற அரசன் பெர்சிப்போலீஸ் என்றஇடத்துக்கு அருகே நிறுவியுள்ள நினைவு அடையாளம் ஒன்றில் 'இந்து' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறான்.

மெருதாந்திரா, புராஸ் சாராயார்குவா, பவிஷ்யபுராணா என்ற தாந்திரீகக் கதைகளைத் தவிர, வேறு எந்த 'இந்து' மத நூல்களிலும் 'இந்து' என்ற சொல்லே இல்லை. இந்த தாந்திரீகக் கதைகள் எல்லாம் மிகவும் பிற்காலத்தில் வந்தவை.

காலம் செல்லச் செல்ல, இந்த ஆரிய 'கலாச்சாரம்' 'பாரதம்' முழுவதும் பரவியதோடு பாரதத்துக்கு வெளியேயும் பரவியது. இப்படிப் பரவிய போது, பல்வேறு பட்ட மக்களின் கலை, பண்பாடு, பழக்க வழக்கங்களையும் தன்னகத்தே ஏற்றுக் கொண்டு பரவியது. பல்வேறு நம்பிக்கைகள், சிந்தனைகள், பழக்க வழக்கங்கள், உணவு முறைகளைக் கொண்டவர்களையும் இந்து மதம் ஏற்றுக் கொண்டு 'இந்துத்வா' என்ற ஒரே அடிப்படையின் கீழ் வலுப்பெற்றது.

அவ்வப்போது வந்த முனிவர்கள் (ரிஷிகள்) அவ்வப்போது தங்களுக்குத் தோன்றிய கருத்துகளையெல்லாம் எடுத்துக் கூறி, அவைதாம் குமுக நெறிகள் என்று கூறினர். அவையே ஏராளமான ஸ்மிருதிகளாக உருவாயின. அந்த முனிவர்களின் மதத்துக்கு ஆரிய தர்மம் அல்லது சனாதன தர்மம் என்று பெயர். பிற மதத்துக்காரர்கள் இந்த ஆரிய மதத்தைப் பின்பற்றியவர்களை 'இந்து' என்று கூறியதால், ஆரிய மதம் 'இந்து' மதமாகியது. இந்துக்கள் வாழும் நாடு 'இந்துஸ்தான்' ஆகியது.

—நித்ய நாராயணன் பானர்ஜி
இந்து நாளிதழ் 17-2-1987.

கல்வியின் தரத்திற்கும் பணக்கார வீட்டுப் பிள்ளைகளுக்குக் கிடைக்கும் கல்வியின் தரத்திற்கும் பெரிய அளவில் வேறுபாடு உள்ளது. அஃதாவது பணக்கார வீட்டுப் பிள்ளைகள் நல்ல வசதி படைத்த பள்ளிகளில் சேர்க்கப் பெறுவதால் சிறந்த மாணவர்களாகத் திகழ முடிகிறது. ஏழை வீட்டுப் பிள்ளைகள் போதிய வசதிகள் இல்லாத பள்ளிகளில் படிக்க வேண்டியிருப்பதால் அவர்கள் சிறந்த மாணவர்களாகத் திகழ்வது அரிதாக உள்ளது. கல்வி கற்க வாய்ப்புப் பெறுவதில் மாணவர்களிடையில் உயர்வு தாழ்வு காட்டப்படுவதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

—தமிழக ஆளுநர் அலெக்சாந்தர்.

### யாருக்கும் சலுகை இல்லை!

கைத்தொழில் துறையில் வேண்டியவர் வேண்டாதவர் என்ற பாகுபாடு இனி இராது. யாருக்கும் தனிப்பட்ட சலுகையும் கிடைக்காது. தொழிலதிபர்கள் யாரும் அரசுக்கு அழுத்தம் கொடுத்து அதைப் பணிய வைக்கவும் இடமளிக்கப் படமாட்டாது.

— நடுவண் பொருளமைச்சர் மதுதண்டவதே

### பாடநூல்கள் அச்சீட்டில் பணச்செலவு அதிகமும் காலத் தாழ்த்தமும்!

250 தனியார் அச்சகங்களில் ஆண்டுக்கு 30 கோடி உருபா செலவில் ஏறத்தாழ 9 கோடி பாடப் பொத்தகங்கள் அச்சிடப்படுகின்றன. இதனால் அரசுக்கு வீண் செலவும் காலத்தாழ்த்தமும் ஏற்படுகிறது. இதனால், அரசே அச்சகம் நிறுவுவதற்கான முயற்சி செய்து வருகிறது.

—தமிழ்நாடு கல்வியமைச்சர் அன்பழகன்.

### வி.பி.சிங் அரசு வளைந்து கொடுக்காது!

இராசீவ் அரசை விட அமெரிக்க நிலைக்கு வி. பி. சிங் அரசு வளைந்து கொடுக்காது.

—அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

முதலமைச்சர் கருணாநிதி 30 திரைப் படங்களுக்கு 61 இலக்க உருபா நல்கைக்கொடை வழங்கியிருக்கிறார். திரைப் படங்களுக்கு எவ்வளவு கட்டணம் உயர்த்தினாலும் மக்கள் படம் பார்க்கிறார்கள். இதற்கு ஏன் நல்கை (மானியம்) வழங்க வேண்டும்.

இந்த நாட்டுக்குத் திரைப் படங்கள் தேவையே இல்லை. திரைப்படங்கள் இளைஞர்களின் வேகத்தைக் குறைத்துவிட்டது. இலங்கைத் தமிழர்களுக்கு உள்ள வேகம் நம் இளைஞர்களுக்கு வேண்டாமா? இளைஞர்கள் திரைப்பட நடிகர் மன்றங்களை வைத்துக் கொண்டு சோம்பேறிகளாகி வருகிறார்கள். தொழிற்சாலைகளுக்குப் போவதுபோல், எந்தத் திரைப்படக் கொட்டகையை எடுத்துக் கொண்டாலும், இளைஞர்கள் காலையிலிருந்தே வரிசையில் நிற்கிறார்கள். சோம்பேறிக் குமுகாயத்தை வளர்க்கும் திரைப்படங்கள் தேவையில்லை.

—முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர்,
பி. எச். பாண்டியன்.

### நரிமணம் எண்ணெய்! உரிமை வேண்டும்!

நரிமணத்திலிருந்து கிடைக்கும் எண்ணெய் நாடு முழுவதற்கும் பயன்படுத்தப் பெறுவதால், நடுவண் அரசிடம் தமிழக அரசு அதற்கு உரிமைப் பங்கு (ராயல்டி) தருமாறு கேட்க வேண்டும். தேசிய அளவில் தமிழ்நாட்டுக்குரிய முகாமை அளிக்கப்படுகிறது என்பதை இ'து உறுதி செய்யும். —சென்னை, முன்னாள் உயர்நெறிமன்ற நடுவர் பி. வேணுகோபால்.

### அன்பர்களுக்கு...!

பலவகையான அலுவலக இடர்ப்பாடுகள் காரணமாக திசம்பர் '89 இறுதியில் வரவேண்டிய இவ்விதழ் சனவரி '90-இல் வெளிவருகிறது. அன்பர்கள் பொறுத்துக் கொள்க. —அமைச்சர்.

**உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!**

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு - 50**

ஒரு கொள்கையை மக்களிடம் எடுத்துச் செல்ல, உண்மையான தொண்டர்களும் நிறையப் பொருளும் தேவை! இவற்றில் தொய்விருப்பின் செயல் தொய்வடையும்!

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண் - 133.

அனுப்புதல்:

**தமிழ்நிலம்**
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829
உறுப்பினர்:
தனி இதழ் விலை உரு. 1-0
ஆண்டுக் கட்டணம் உரு. 50-0
அரையாண்டுக் கட்டணம் உரு. 0

தமிழன் ஒவ்வொருவனும் கட்டாயம் படிக்க வேண்டிய இதழ்கள்! தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு!

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

TN/MS (C) 657